# போர்வாள்


"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வாரத்தாள்

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 3

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 15
1—10—49 சனிக்கிழமை

வீச்சு 6




திராவிட முன்னேற்றக் கழகக் கொடி
திக்கெட்டும் பறக்கட்டும்

# முதுகை நெறிக்கும் முத்தண்ணாக்கள்!

★

## பெண்கட்குச் சொத்துரிமை தருவது தகாதாம்!

★

"எழுந்திருக்கப்படாதோ, சாப்பாட்டுக்கு! நேரமாகவில்லையோ? ஓயாது, வளவளன்னு வாயாடிண்டே இருக்கேள். இந்த அடுத்தாத்து அழுமூஞ்சி வந்தாலே இப்படித்தான் ஆறது. அதுக்குத்தான் வீடுவாசலைப் பத்தின கவலையே கிடையாது. நீரும் அப்படித்தானே" என்று சகதர்மிணி சற்று காரசாரமாகப் பேசி, சாப்பாட்டுக்குச் "சம்மன் சார்வு" செய்தது கண்ட, சாட்சாத் சனாதனி, கோபத்தைச் சோகத்தால் மறைத்துக்கொண்டு, "நேக்கென்னமோ வயத்தைப் பசிக்கல்லே. நீ போய் சாட்டுட்டுப் படுத்துத் தூங்கு, உசிரை வாங்கிண்டு இராதே" என்று கூறினார். சகதர்மணிக்குக் கோபம் குறைந்து, புருஷன்மீது கொஞ்சம் கனிவு பிறந்தது. "கொஞ்சம், விளாங்காயளவு சாட்டுட்டுப் படுத்துத் தூங்குங்கோ. இராத்திரியிலே, வெறுமனே படுத்தா வயத்தைப் பிறட்டுமே" என்று கெஞ்சினாள் கொஞ்சம் கொஞ்சுதலையும் கூடக் கலந்து. உண்மைதானே, நடுநிசியிலே, இந்த நாசமாப்போன பசி வந்தால் என்ன் செய்வது, அது வந்தால் பத்தும் பறக்குமே, என்று சனாதனியும் பயந்தார். ஆனால், அடுத்தாத்து ஐயருக்குக் கொடுத்த வாக்குறுதியையோ, மீறமுடியாது, மீறினால் குளத்தங்கரையிலே அமளிபடும். இருபுறமும் இடி. சனாதனசர்மா, சற்று யோசித்தார், "சரி என்ன சாப்பாடு செய்திருக்கப் போகிறார்கள் வீட்டிலே" என்று. அவர் மனதை அறிந்துரைப்பது போல, சகதர்மிணி கூறலானாள். "வெங்காயச் சாம்பார் அருமையா இருக்கு. அப்ளாம் பொறிச்சிருக்கேன். வத்தலும் இருக்கு. கொத்தமல்லி துவையல் ஜோரா செய்திருக்கேன்' என்றாள், கொத்தமல்லி துவயலைப் போட்டுப் பிசைந்து, நெய் இரண்டு கரண்டி தாராளமாகப் போட்டு ஒருபிடி சாப்பிட்டால், ரம்மியமாக இருக்குமே என்று சனாதனி எண்ணினார். அப்படிச் செய்வதற்கில்லையே என்பது மனதிலே உறுத்தியபோது, கோபம் கொழுந்துவிட்டு எரியலாயிற்று. "சரி, சரி, போதும் உன் சாம்பாரும் துவையலும். நான் இன்னைக்கிச் சாப்பிடமாட்டேன். உண்ணாவிரதம் இருக்கிறேன். ஒரு காரியமா, நாங்க சிலபேர் சேர்ந்துண்டு இன்று ஒரு சபதம் செய்துண்டோம், உண்ணாவிரதமிருக்கிறதுன்னு"—என்று சனாதனி சடசடவென மொழிந்தார். சகதர்மிணியின் சிரிப்பு அவருக்குப் பச்சை மிளகாயைக் கடித்துவிட்டால் உண்டாகும் எறிச்சலைப் போல உபத்திரவமுண்டாக்கிற்று. "உண்ணாவிரதமோ! அப்போ, ஆரஞ்சு ஒரு டஜன் தேவையில்லையோ" என்று கேலி பேசலானாள். "ஆரஞ்சா? எதுவுமே சாப்பிடப்போறதில்லேடி. ஆமாம், சர்வபரித்தியாகத்துக்கும் தயாராக இருக்கும் பரம்பரையன்னோ. கவனமில்லையோ?" என்று சனாதனி, உபதேசம் புரியலானார். "உண்ணாவிரதம்னு சொன்னீரே, இந்தப் பித்துக்குளி யோசனை ஏன் உதிச்சுது உமக்கு. பேசாமே எழுந்துவாரும். நாளைகாலையிலே ஸ்நானம் செய்யறபோது இரண்டு எலுமிச்சம் பழத்தை நன்னா தலையிலே தேச்சி, முழுகுங்கோ!" என்று சகதர்மணி, வைத்யமே கூறிவிட்டாள். "போதும், வாயைமூடிண்டு போடி! புருஷாளுடைய கையை எதிர்பார்த்து இருக்கும் போதே. இத்தனை கொர்வமிருக்கு, வாயிருக்கு. இவாளுக்குச் சொத்து பாத்யதை வேறே தேவையாம்! கலி முடியாதும் இந்தச்சனியன் பிடிச்சவா தொல்லை தீரவில்லை.! என்றார் சனாதனி. 'என்னத்தைக் குளறிண்டிருக்கேள்? நேக்கொண்ணும் புரியல்லையே?' என்று சகதர்மிணி கேட்டாள், "இந்தசர்க்கார் இருக்காளேன்னோ, அவா இப்ப அபூர்வமா ஒரு யோசனை சொல்றா. ஸ்திரிகளுக்குச் சொத்துபாத்யதை தரணுமாம். ஒரு குடும்பத்திலே, ஆண்தானே ஆளப்பிறந்தவானுன்னு ஆதிநாட்களிலிருந்து சொல்வா. இக்ஷவாகு பரம்பரையென்ன, இரகுவம்சமென்ன, சனகாதி முனிவர்களென்ன, இவாளுடைய முறைகள் தவரும். இப்போ, பெண்களுக்கும் சொத்துதர சட்டம் கொண்டுவரப்போரு. அதைக் கண்டிக்க, நாங்க தீர்மானிச்சுட்டோம், உண்ணாவிரதம் அதுக்காகத்தான்" என்றார் சனாதனி ரோஷத்தோடு. சகதர்மணிக்குச் சிரிப்புக்குப் பதில், சீற்றம்பிறந்தது. முந்தானியை இழுத்துச் செருகினாள். தொண்டையைக் கனைத்தாள், "பெண்களுக்குச் சொத்து வாரிசு கூடாதா? அதுக்காக உண்ணாவிரதம் இருக்கேளா? ரொம்ப சரியாச்சி. பெண்களை இந்த ஆண்கள் ஆதிநாட்களிலிருந்து படுத்தினபாடு இருக்கே, அதுக்கு, இந்தப் பெண்களுக்கு மட்டும், ரோஷம் மானம் இருந்திருக்குமானா, நிரந்தரமாக உண்ணாவிரதமிருக்கும்படியா ஆண்களைச் செய்திருக்கணுமே. உண்ணாவிரதமா இருக்கப் போறேள்! ஊர்நாடு கேட்டுச் சிரிக்கட்டும், இப்படி அழுக்கு மூட்டைகள இந்தக் காலத்திலேயும் இருக்குமோன்னு! சாட்சாத் அவதாரமுன்னு கொண்டாடும் இராமன் முதற்கொண்டு பெண்கள் விஷயமா அக்ரமந்தானே செய்தா. லோகநாயகியை, கர்ப்பிணியா இருக்கச்சே கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டுட்டு வரச் சொல்லலையோ அந்த இராமன் என்று சகதர்மணி, ஆதியிலிருந்து அந்தம்வரை ஒரு குலுக்கு குலுக்குவதென்ற தீர்மானத்திலே, பேசலானாள். தனக்குமட்டுமல்ல, தாசரதிக்கே இடி கிடைக்கிறது என்று சனாதன சர்மாவுக்குக் கோபம் பிறந்துவிட்டது. 'இராமன் செய்த காரியத்தைப் பழிக்கிறயோ? அந்தச் சீதை, ஏண்டி, இராவணனுடைய கிரஹத்திலே, பத்து

மாதம் இருந்தா. பத்துமாத காலம் பரக் கிரஹத்திலே ஒருவள் வாசம் செய்தா, அவளைப்பற்றி சந்தேகம் உதிக்காதோ' என்று, இராமநுக்கு, ஐயர், வக்கீலானார். சகதர்மணி இதற்குப் பயப்படவில்லை. 'ஏன் இருந்தாளா? அந்த இராமன் செய்த காரியத்தாலேதான், சீதாவுக்கு அந்தக்கதி ஏற்பட்டது,'' என்று டிபென்சுதரப்பு ஆரம்பித்து, "அந்தச் சூர்ப்பனகையைக், காது மூக்கு அறுத்ததாலே, இராவணனுக்குக் கோபம் பிறந்து சீதையைத் தூக்கிண்டு போனான்.'' என்றாள். "அப்படின்னா, சூர்ப்பனகையை இராமன் பாணிக்கிரகணம் செய்துண்டு வாழனும்னு பேசறியோ நீ! ஏண்டி, நோக்கு சாஸ்திரமென்னடி தெரியும்? தாரமிருக்கும்போது, தசரத குமாரன், சூர்ப்பனகையை எப்படியடி ஏற்றுக்கொள்ள முடியும்?'' என்று அதுக்குக் கேள்வி போட்டார், ஐயர். "ஒருவள் இருக்கையிலே இன்னொருவள் கூடாதுன்னு எந்த சாஸ்திரம் சொல்கிறது, யார் அது போல நடந்தா. தசரதனுக்கு 60, ஆயிரமாமே! அவன் நாசமாய்ப் போக, அறுபதாயிரம் பேரை வைச்சிண்டு இருந்தானாமே? அவன் மகனுக்கு ஒண்ணேபோதும்னு, வேறொருத்தி வந்தா அவளைப் பங்கம் செய்கிறதுதான் நியாயம்னு தோணும்போலிருக்கு! ரொம்ப நியாயமன்னோ அவன் செய்தது'' என்று சகதர்மிணி பெண்சிங்கம்போலக் கர்ஜித்தாள். 'பேசுவது நீ இல்லையடி. காலமென்னும் பேய் பேசுகிறது. துர்ப்பாக்கியம் உன் மூலமாக உலகுக்குத் தூதுவிடறது. தமயந்தி, சாவித்ரி, நளாயனி முதலானவா ஜனித்த புண்ய பூமியிலே, இந்தக் காளான்கள் முளைச்சிருக்கு'' என்று, ஐயர், வாதத்தை நிறுத்தி விசாரத்திலே பேச்சைத் திருப்பினார். வாயை அடக்கிவிட்டோம், என்ற பூரிப்புடன், சகதர்மிணி, 'ஆண்களுக்குத்தான் சொத்து உண்டு, பெண்களுக்குச் சொத்து கூடாது எனப் பேசுகிறவா, மடையரன்னோ? தாய் வயற்றிலே பிறந்து, தாய்க்குலத்துக்கே துரோகம் செய்து செய்துதான், தர்மமே க்ஷீணித்து விட்டது இந்தத் தேசத்திலே. பெண்ணாப் பிறந்தா, என்ன, பாவமோ? பெண்ணில்லாமலே ஆண்கள் வாழுவாளோ? வாழாது கிடக்கட்டும்? இவாளுடைய ஜெனனமே, பெண்களால்தானே! சொத்து இவாளுக்கு, சுகம் இவாளுக்கு, உழைக்க நாங்க. இந்தச் கேடுகெட்ட புத்தி இருக்கும் வரையிலே, நாடு உருப்படாது, நாசமாகத்தான் போகும்'' என்று சபித்துவிட்டு, மறுபடி, சாப்பிட வருகிறீரா, என்று கணவரைக் கூப்பிடாமல் சென்று, சப்பாசாதத்திலே, கொத்தமல்லித் துவயலைக் கலந்து, நாலு கரண்டி நெய் வார்த்துக்கொண்டு, சாம்பாரையும் கொஞ்சம் சுவைத்துத், தின்றாள். பிறகு, சாம்பாரைச் சாதத்துடன் கலந்து, வற்றலை நறநறவெனக் கடித்தாள். அந்தச் சத்தம் கூடத்து ஊஞ்சலில் சாய்ந்து கொண்டிருந்த சனாதன சர்மாவுக்கு, ஜெர்மன், ஜப்பான் வெடிகுண்டு சத்தத்தைவிட வேதனையைத்தான் தந்தது. ஆனாலும் பாவம், அவர் என்ன செய்ய முடியும்? வாக்கு கொடுத்து விட்டாரே!

இந்தியா மத்யசட்ட சபையினர் பெண்களுக்கும், ஆண்கள் போலவே சொத்துரிமை தரவேண்டும் என்ற முயற்சி செய்வது, இந்நாட்டிலே உள்ள, கேதுராகுகளுக்குப் பிடிக்கவில்லை. சாஸ்திரம், தருமம் என்ற சாக்குரைத்துக்கொண்டு சளசளவெனப்பேசலாயின. இந்த வைதீக வறட்டுக் கூச்சலையாரும் பொருட்படுத்துவதாகக் காணோம். எனவே, சக்தியால் சாதிக்க முடியாததை, யுக்தியால் சாதிக்க யோசித்து, உண்ணாவிரதம் இருப்பது என்று, லட்சுமணபுரி வைதீகப் பிரகிருதிகள் தீர்மானித்தனவாம். பெண்களுக்கு சொத்துரிமை தருவதைத்தடுக்க, இந்த வீரர்கள், இவ்வழியைக் கண்டுபிடித்தது கண்ட, அவர்களின் சுகதர்மிணிகள், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் மசோதா நிறைவேறித்தானாக வேண்டும், அதற்காக, நாங்கள் உண்ணாவிரத மிருக்கப் போகிறோம் என்று கூறிவிட்டு, அனுமார் ஆலயத்திலே பூஜைசெய்து விட்டு உண்ணாவிரதத்தை துவக்கினர், என்று ஓர் செய்தி, சுதேசமித்திரனில் காணப்படுகிறது.

நமது கதையிலே, அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சனாதனசர்மா, அந்த ரகம்! அவரும், உண்ணாவிரதம் இருக்கலானார், சில பழய பஞ்சாங்கங்களின் தூண்டுதலால். லட்சுமணபுரி சனாதனிகளின் மனைவிமாரைப் போன்ற பத்தினியல்ல, நமது கதையிலேவரும், அம்மையார். பெண்களுக்குத் துரோகம் செய்யும் பேர்வழிகள், உண்ணாவிரதமிருப்பது, அவர்கள் அடையவேண்டிய தண்டனையே. அனுபவிக்கட்டும், நமக்கென்ன, என்று, எண்ணி வழக்கமாகச் சாப்பிடுவதுபோல அன்றும் அந்த அம்மையார் சாப்பிட்டார்கள். வாயினால்,வயிற்றுக்கு வம்பை வருவித்துக் கொண்ட சனாதனசர்மா, சாம்பாரின் சுவையையும், துவையலின் மணத்தையும், வற்றலின் மொறமொறப்பையும், எண்ணினார் ஏங்கினார், தூங்கினால் துயரம்போகும் என்றெண்ணிக் கண்ணை மூடினார், வயறு கிள்ளுவது பொறுக்க முடியாது, புரண்டார், புலம்புவதற்குப் பதிலாக, "இராமா! ரகுநந்தனா! ரகுபதே! லோகரட்சகா!'' என்று கூவிக்கொண்டிருந்தார். இதற்குள், அம்மையார்,தெரு வாசற்படிக்கு வந்து நின்றார்கள். உரத்த குரலிலே, "அடி! அலமு! அலமு!'' என்று கூப்பிடவே, எதிர் வீட்டிலிருந்து ஒரு குட்டி ஓடிவந்து, "அத்தே! கூப்பிட்டேளா?'' என்று கேட்டாள். "ஆமாண்டி அசடே! கொத்தமல்லி துவையலிருக்கு, நோக்கு வேண்டுமோ?' என்று கேட்டாள் சகதர்மிணி. "கொத்தமல்லித் துவையலா? நீங்க செய்தா அது ரொம்ப நன்னாயிருக்குமே. கொடுங்கோ அத்தே.'' என்று குட்டி சந்தோஷத்தோடு கேட்டாள். துவையல், வற்றல், சாம்பார், தனித் தனிப் பாத்திரத்திலே, எதிர் வீடு போய்ச் சேரக்கண்டார் சர்மா. "சர்வேஸ்வரா! லோகரட்சகா'' என்று அலறிக்கொண்டே, தெருத் திண்ணைக்குச் சென்று அமர்ந்தார். பக்கத்து வீட்டுக்காரர்தான், சர்மாவை, உண்ணாவிரதம் இருக்கும்படி தூண்டியவர். சத்யம் வாங்கியவர். அவர், சாருமணையிலே சாய்ந்துகொண்டிருந்தார். அவருடைய திருவாயிலிருந்து, சர்வேஸ்வராபோன்ற சத்தம் வரவில்லை. மெல்லிய குறட்டைதான் வந்துகொண்டிருந்தது. சர்மா மெள்ள எழுந்தார், தள்ளாடிக்கொண்டு, பக்கத்து வீடு சென்றார், "ஓய்! குப்புசாஸ்திரி! என்ன

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிடர் கழகம்—இன்று இடிந்த கட்டிடம்!

## புதியகருங்கற் கோட்டை உருவாகின்றது!

## அணுக்குண்டுகளின்முன் ஊசிவெடிகள் என்செய்யும்?

### வெற்றிப் பாதையில் விரைந்து நடப்போம்!

★

சேலத்தில் ஆரியத்தை அழிக்க—வட இந்திய ஏகாதிபத்தியத்தை ஒழிக்க—வர்ணாஸ்ரமத்தை வீழ்த்த—சனாதனத்தை சாகடிக்க — அறியாமையை அகற்ற அண்ணா அவர்களால் " திராவிடர் கழகம் " எனப் பெயரிடப்பட்டு நாம் அனைவரும் அரும்பாடுபட்டு கட்டிய கோட்டை செப்டம்பர் மாதம் 17-ம் தேதியன்று காலி செய்யப்பட்டு விட்டது.

பள்ளிகளிலும்— கல்லூரிகளிலும் புகுந்து மாணவர் படையைத் திரட்டியவரும், சோமசுந்தர பாரதி—சேதுப்பிள்ளை முதலிய அறிஞர்களுடன் சொற்போர் நடத்தி அவர்களைத் தம் வசப்படுத்தி, அவ்வறிஞர்களின் ஆதரவை கழகத்திற்குத் தேடித் தந்தவரும், சினிமா உலகிலும் புகுந்து தன்மான இயக்கப் கொள்கைகளைப்புகுத்தி பொது மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து கழகத்தின் செல்வாக்கை வளர்த்தவரும், களத்தில் வெற்றிபல தேடித் தந்தவருமான தன்னிகரற்ற தளபதி அண்ணா அவர்களும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும், மற்றும் பல மத்திய திராவிடர் கழக அங்கத்தினர்களும் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களும்—ஊழியர்களும் 17-ம் தேதியன்று திராவிடர் கழகக் கோட்டையைவிட்டு வெளியேறி விட்டனர். எதிரிகளின் எதிர் தாக்குதலை சமாளிக்க முடியாமல் அல்ல—ஆச்சாரியுடன், சர்மாக்களுடன், முதலாளித்வ முத்தண்ணாக்களுடன் கூடிக் குலாவவும்அல்ல, பட்டம்பதவியும், பேரும் புகழும் எதிர்பார்த்து அவைகள் கிடைக்காததால் ஏற்பட்ட ஏமாற்றம் காரணமாகவும் அல்ல, எந்தப் பாசிசம் உலகம் அழிவதற்குக் காரணமாயிருந்ததோ—எந்தப் பாசிசம் ஹிட்லர், முசலோனி முதலிய பெருந் தலைவர்களின் அழிவிற்குக் காரணமாயிருந்ததோ—எந்தப் பாசிசம் உலகத்தை பயங்கர யுத்தத்தில் ஆழ்த்தியதோ—எந்தப் பாசிசத்தை ஒழிக்க இன்றுவரை நாம் எதிர்த்துப் போராடி வந்தோமோ அந்தப் பாசிசம் இன்று பெரியார் உருவத்தில் திராவிடர் கழகக் கோட்டையில் தாண்டவமாடுகிறது. அந்தப் பாசிசத்திற்குப் பலியாகாமல் தப்பிக்கவும், செந்தேனில்—மதுவில் மயங்கி வீழ்ந்து மடியும் ஈக்கள் எறும்புகளைப் போல் மக்கள் அதனின் வஞ்சக வலையில் வீழாமல் தடுக்கவும், கொண்ட கொள்கையை நிலைநாட்டவும், மக்களாட்சி முறையில் தமக்குள்ள மதிப்பையும், ஜனநாயகத்தில் தமக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையையும் உலகத்தாருக்கு உணர்த்தவும், தாங்கள் ஜனநாயக வாதிகள் — இலட்சிய வாதிகள் என்பதனை நிரூபிக்கவுமே திராவிடர் கழகக்கோட்டையினின்று கண்களில் கண்ணீர் வழிய. உடைந்த உள்ளத்துடன் வெளியேறி புதியதொரு கோட்டையை " திராவிட முன்னேற்றக் கழகம் " என்ற பெயரால் ஆரம்பித்துக்கட்ட முனைந்திருக்கின்றனர். இன்று " திராவிடர் கழகக் கோட்டையில்" பெரியார் தம்பதிகளும், அவர்தம் அருமை சீடர்களாகிய முனை மழுங்கிய குத்தூசிகளும், தத்துப் பிள்ளை வேதாசலங்களும், செல்லப் பிள்ளை சனார்த்தனங்களும் இருக்கின்றனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் நேரத்தில் வேறுபல புதிய ஆட்களைக்கொண்டு வேலை நிறுத்தத்தால் பாதிக்காமல் தொழில் நடைபெறுவதாகக் காண்பிக்கும் முதலாளிகளைப்போல், பெரியாரும் திராவிடர் கழகத்தை நடத்திக் காட்ட முனைவது ஆச்சரியப்படத் தக்கதல்ல. நமக்கு அதுபற்றிக் கவலையில்லை

நமது கவலையெல்லாம் இதுகாறும் இதயத்தில் இருத்திப் போற்றி வளர்த்துவந்த இலட்சியத்தைப் பற்றியதே. பெரியாரின் பொருந்தாத் திருமணத்தாலும், அத்திருமணத்திற்கான முன்னுக்குப் பின் முரணான விளக்கங்களாலும், அவரது விடாப்பிடியான விபரீத செய்கையாலும் அந்த உயர்ந்த இலட்சியத்திற்கு இழுக்கு நேராமல் காக்கவும் — அந்த உன்னத

கொள்கைக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாக்கவும், அவைகளை நிறைவேற்றவுமே இன்று அண்ணா அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டு 'திராவிட முன்னேற்றக் கழகம்' அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு அன்று திராவிடர் கழகம் கட்டப்பட்டதோ அதே அடிப்படையின்மீதுதான் 'திராவிட முன்னேற்றக் கழகம்' இன்று கட்டப்படுகிறது. அன்று திராவிடர் கழகத்தைக் கட்டி முடித்த அதே சிற்பிகளும் விஞ்ஞானிகளும், உழைப்பாளிகளும், தொண்டர்களுந்தான் இன்று திராவிடர் முன்னேற்றக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதிலே முனைந்து நிற்கிறார்கள். எந்தக் கொள்கையினை இட்டு திராவிடர் கழகப் பயிரை அன்று வளர்த்தனரோ, அதே எருவை இன்று 'திராவிட முன்னேற்றக் கழகப் பயிருக்கும்' இட்டு வளர்க்க முனைந்திருக்கின்றனர். திராவிடர் கழகப் பயிரை வளர்த்துத்தந்தவர்கள் இதே உழவர்கள் — உழைப்பாளிகள் ஆதலால் இந்தப் புதிய கோட்டையைக் கட்ட—பயிரை வளர்க்க முனைந்திருக்கும் அந்த சிற்பிகளுக்கும்— உழவர்களுக்கும் திராவிட மக்கள் அனைவரும் ஆதரவு தருவார்கள் என்பது உறுதி.

இந்தப் புதிய கோட்டையைக் கட்டி முடித்து வெற்றியைக் காண முடியுமோ என்பதில் ஒருவருக்கும் சந்தேகம் வேண்டாம். ஏனென்றால் எந்த அறிஞர்களையும் கவிஞர்களையும் சிற்பிகளையும், ஊழியர்களையும், தொண்டர்களையும் பெரியார் உன்னத நிலைக்கு படிகளாக அமைத்துக் கொண்டு புகழின் சிகரத்திற்கு ஏறிச் சென்றாரோ, எந்த அறிஞர்களாலும், கவிஞர்களாலும் திராவிடர் கழகம் எல்லோருடைய ஆதரவையும்—மதிப்பையும், மாணவ மணிகளின் நல்லுழைப்பையும் பெற்று சீரும் சிறப்புமுற்றதோ, எந்த தளபதிகளின்—தொண்டர் படையின் உழைப்பால் கழகம் அரசியலாருக்கு அச்சத்தையும், ஆரியத்திற்குத் திகிலையும்—புராணிகர்களுக்குப் பயத்தையும்-சனாதனிகளுக்குச்சஞ்சலத்தையும், வடநாடு ஏகாதிபத்தியத்துக்கு ஏக்கத்தையும் உண்டுபண்ணியதோ அதே தளபதிகளும் தொண்டர் படையினரும் நம்மிடத்தில் இருக்கின்றனர். அந்தப் பலம் பொருந்திய சக்திகள் நம்மிடம் உள்ளவரை நாம் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை. தன்னலக்காரர்கள்— துரோகிகள்— சூழ்ச்சிக்காரர்கள்—பதவிப் பித்தர்கள் என்ற—வெளிப்படையாக வீச அஞ்சி மறைமுகமாகத் தூவப்படும் ஊசி வெடிகள்நம் தோழர்களின் பண்பும், உழைப்பும், கொள்கையும், மதிப்புமாகியமாசில்லா அணுகுண்டுகளை அழிக்க முடியாது. தங்கத்தை—பசும்பொன்னை அது தங்கமல்ல பித்தளை—செம்பு என்றும், மதுரமான பாலை அது கள்—சுண்ணாம்பு நீர் என்றும் வஞ்சகர்கள்—சூது மதியினர்—கயவர்கள் சொன்னாலும் தங்கம் பித்தளையாகவும் பால் கள்ளாகவும்மாறி விடாது. அவர்கள் பேச்சைக் கேட்டு தங்கத்தைப் பித்தளை என்று எண்ணி—பாலைக் கள் என்று கருதி ஏமாந்துவிடமாட்டார்கள் அறிவுள்ளோர். தங்கத்திற்கும், பித்தளைக்கும்—பாலுக்கும் கள்ளுக்கும்—அணுகுண்டுக்கும் ஊசி வெடிக்கும் உள்ள வேற்றுமைகளை அறிஞர்கள் அறிவர். உலக வல்லரசுகளிடமிருக்கும் அணுகுண்டுகள் நாசத்தையும் அழிவையுமே விளைவிக்கும். ஆனால் நம்மிடம் உள்ள அணு குண்டுகள் தேவையற்றவைகளை அழிக்கவும், தேவையுள்ளவைகளை ஆக்கவும் சக்தி படைத்தவை. ஆதலால் அவைகளை நாம் தக்க விதத்தில்—சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வோமேயானால் அவை நிச்சயம் அறியாமை இருளை அழித்து அறிவொளியை எங்கும் பரப்பும்—மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்து புரட்சிக் கருத்துக்களைப் பூக்க வைக்கும்—மனிதருக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஜாதி, நிற பேதங்களைத்தகர்த்தெறிந்து சமுதாய சமத்துவத்தை நிலைநாட்டும்—மடமையை வளர்க்கும் மதமெனும் பேயை அழித்து மங்காத மதிச் சுடரை எழுப்பும்—பார்ப்பன, பனியா, பாங்கிகளின் சுரண்டலை ஒழித்து திராவிட நாட்டைத் திருநடம் புரியும் இன்ப புரியாக மாற்றும். ஆகவே, "திராவிட முன்னேற்றக் கழகத்தை"வளர்க்க ஒன்றுதிரண்டு வாரீர். வெற்றி நமதே!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டூர்களாகிய நம்மையே அசுரர்களென்றும், ஆரியராகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்து கதைக் கட்டி இருக்கிற தேவ அசுரப் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற இந்தக் கதையை தமிழ்மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம். அந்தோ என் செய்வது? நம்மை ஏமாற்றி நம்மையே பழிக்கும் பார்ப்பனர் கட்டுக்கதையை உண்மையென நம்பி நாமே கொண்டாடி வீண் செலவு செய்வதென்றால் நமது சுயமரியாதையை என்னென்பது? பகுத்தறிவை என்னென்று கூறுவது?

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 15
1—10—49 சனிக்கிழமை

# மாஸ்கோ வீசிய அணுக்குண்டு !

மாஸ்கோ வீசிய அணுக்குண்டு! ஆம்! அதுதான், இந்த வாரம், இந்த மலர்தலை உலகம் முழுவதிலும் பேசப்பட்டுவரும் 'மகத்தான சேதி!'

அமெரிக்க குடியாட்சித் தலைவர் ட்ரூமன் அவசர அவசரமாகப் பேசுவது அந்த அணுக்குண்டைப் பற்றித்தான்! பிரிட்டிஷ் நாட்டு முதலமைச்சர் அட்லி பதைபதைத்தபடி உரை பொழிவதும் அந்த அணுக்குண்டைப் பற்றித்தான்! தென்னாப்பிரிக்காவில் பேசப்படும் பிரச்சினை அந்த அணுக்குண்டுதான்! வட அமெரிக்காவில் நடமாடும் கேள்வியும் அந்த அணுக்குண்டு பற்றிதான்! தினசரிகளில் எல்லாம் தகதகவென வெளிவரும் சேதி அந்த அணுக்குண்டு பற்றியதுதான்! ஏடுகள் எல்லாம் தலையங்கம் தீட்டுவதும் அந்த அணுக்குண்டைப் பற்றியேதான்! மக்கள் நாவில் நடமாடுவதும் அந்த அணுக்குண்டுதான்! மக்கள் ஆட்சித் தலைவர்கள் மனதை உருட்டிக் கொண்டிருப்பதும் அந்த அணுக்குண்டேதான்! எங்கும், எங்கெங்கும், திக்கெங்கும், மாஸ்கோ வீசிய அணுக்குண்டைப்பற்றிய பேச்சாகத்தான் இருந்து வருகிறது இந்த ஏழெட்டு நாட்களாக!

உண்மையிலேயே, "சேதி", அவ்வளவு முக்கியமானதுதான் உலகம் முழுவதும் கவனிக்கத்தக்க மதிப்பும் பெருமையும் தன்னிடத்தே அமையப்பெற்ற சேதிதான் அது. இந்த உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை.

உலகம் இன்றைய தினம் இரண்டு கூறுகளாகப் பிரிந்து கிடக்கிறது. குபேர நாடாகிய அமெரிக்காவும் அதனைச் சார்ந்திருக்கும் இங்கிலாந்து முதலிய நாடுகளும் ஒரு புறம் நிற்கின்றன. சமதர்ம மணம் கமழும் சோவியத் ரஷ்யாவும் பொதுவுடைமைப் பூங்காவாகப் பொலியும் அதனையொத்த சில நாடுகளும் மற்றோர் புறம் நிற்கின்றன. இரண்டு புறத்து நாடுகளுக்குமிடையே 'பகை' என்ற பெரும் பள்ளம்! இது, இன்றைய உலகம்!

அமெரிக்காவிடத்திலே அகில உலகையும் ஆட்டிப் படைக்கும் 'டாலர்' இருக்கிறது. சோவியத் ரஷ்யாவிடம் உலகையே உருவாக்கும் தொழிலாளர் சக்தியின் சின்னமாகிய சம்மட்டியும் அரிவாளும் இருக்கின்றன. பலம் பொருந்திய முதலாளித்வ சக்தியின் ஆதரவு அமெரிக்காவுக்கு! அதனினும் பலம் பொருந்திய உழைப்பவர் உள்ளத்தின் உயர் நட்பு ரஷ்யாவுக்கு! படை பலமோ, ஒன்றை ஒன்று மிஞ்சக்கூடிய அளவுக்கு இரண்டு நாடுகளிடமும் உள்ளன. யாருக்குச் சக்தி அதிகம் ரஷ்யாவுக்கா அல்லது அமெரிக்காவுக்கா என்பது விடைகாண முடியாத புதிராக இருந்து வருகிறது. ஒன்று சீறிப் போரிடும் சிங்கம் என்றால், மற்றொன்று பாய்ந்து பதுங்கிடும் புலி! ஒன்று கடும்போர் புரிய அஞ்சாத காளை என்றால் மற்றொன்று அஞ்சாத நெஞ்சு படைத்த ஆற்றலரசன்! ஒன்று வீரன் என்றால் மற்றொன்று தீரன்! ஒன்றிற்கொன்று சளைக்காத சக்தியும் தீரமும் திறமையும் படைத்த நாடுகளாகவே இவை இரண்டும் இருந்து வருகின்றன.

ஆனால் இதுவரை, ரஷ்யாவிடம் இல்லாத ஒரு பலம், ஒரு செல்வாக்கு, ஒரு தனி சக்திப்பொறி, ஒரு ஒப்பற்ற போர்க்கருவி அமெரிக்காவிடம் இருந்து வந்தது. அதுதான் அணுக்குண்டு! "**உண்டு என்னிடம் அணுக்குண்டு! இதுபோலொன்று வேறு எவரிடம் உண்டு?**" என்று இறுமாப்புப் பாசுரம் பாடி வந்தது அமெரிக்கா இதுவரை! தன்னிடம் இருக்கும் அணுக்குண்டைக் காட்டிக் காட்டியே உலக மன்றத்தில் தனக்கோர் உயரிடம் தேடிக் கொண்டது அமெரிக்கா. "கையிலிருக்கிறது அணுக்குண்டு! எனவே சோவியத் ரஷ்யா என்னை என் செய்யும்?" என்று பெருமையுடன் பேசலாயிற்று அமெரிக்கா. "ரஷ்யாவிடம் படை பலம் இருக்கிறது—உண்மை! போர்த்திறம் ஏராளமாக இருக்கிறது—உண்மை! எதற்கும் அஞ்சாத அடலேறுகள் ஆயிரமாயிரவர் உள்ளனர்—அதுவும் உண்மை! ஆனாலும் என்ன—அணுக்குண்டு கிடையாதே ரஷ்யாவிடம்—அது, என்னுடைய தனிச்சொத்தாக அல்லவா இருக்கிறது—ரஷ்யா, என்ன செய்ய முடியும் என்னிடம்?" என்று கொஞ்சம் கேலியாகவே ரஷ்யாவைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது அமெரிக்கா. வேறு யாரிடமும் அணுக்குண்டு இல்லை தன்னிடம் மட்டும்தான் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால், அமெரிக்கா, உலக மன்றத்தில் ரஷ்யாவை உதாசீனம் செய்யவும் கிண்டலாகப்பேசவும் கேலியாகச் சிரிக்கவும் துணிந்து முன்வந்து அத் திருப்பணியை இதுவரை தெள்ளிதின் நிறைவேற்றி வந்தது. ஆனால் அந்த ஆணவப்போக்குக்கு, இறுமாப்புக் கருத்துக்கு, ஏதேச்சாதிகார எண்ணத்திற்கு, ஒரு கசையடியாக வந்தது ரஷ்யா, தானும் ஓர் அணுக்குண்டைச் செய்து முடித்து, அது சரியாக வெடிக்கிறதா என்ற விஷய விளக்கம் பெறுவதற்காக அதனை, தன் நாட்டில், எங்கோ ஓர் இடத்தில், மனித நடமாட்டம் இல்லாத வெட்ட வெளியில், வெடிக்க வைத்துப் பரிசோதனை செய்து பார்த்தது என்ற சேதி!

அமெரிக்க குடியாட்சித் தலைவர் ட்ரூமன், சற்று சோகத்துடனேயே சென்ற வாரம் தெரிவித்திருக்கிறார் அந்த ரஷ்யாவிடமும் அணுக்குண்டு இருக்கிறது என்று! இருக்காதா சோகம்! தங்களிடம் மட்டுமே அணுக்குண்டு உண்டு என்று எண்ணியிருந்த தங்கள் மனக்கோட்டை சடசடவெனச் சரிந்து வீழ்கிறதே

(10-ம் பக்கம் பார்க்க)

# அவருண்ட நஞ்சு

— இராமதுரை —

அன்று ஆதன்ஸ் நகர வீதிகளிலே பரந்த தோள்களையுடைய ஒருவர் புன்னகைத் தவழும் முகத்தினராய் திரிந்து கொண்டிருந்தார். அவர் தலை மிகப் பெரியதாகத் தோன்றியது. அறிவொளி வீசிய அவர் முகத்தில் அழகொளி தென்படவில்லை.

அவரை அந்த நிலையில் கண்ட நகரமாந்தர் இவன் இப்படி ஏன் திரிகிறான் என ஆச்சரியப்பட்டனர். "சில நாட்களுக்கு முன்பு இவன் போர்வீரனாக விளங்கினானே" என்று சிலர் பேசினர். "இவர் ஏன் இந்த நிலைக்கு வந்து விட்டார்? படையை விட்டு இவர் ஏன் நீங்க வேண்டும்? இவர் தான் படையிலேயே சிறந்த போர்வீரராயிற்றே! இவருடைய பேச்சுத் திறன் ஒன்றே போதுமே!" என்று சில படை வீரர்கள் பேசிக்கொண்டார்கள்.

"நீங்கள் வணங்குகின்ற தெய்வங்கள் உங்கள் வணக்கத்திற்கு அருகதை யுள்ளவைகளன்று. அவைகள் உங்களைப் போன்ற மனிதனால் உண்டாக்கப்பட்டவைகள். இப்பரந்த வெளியில் மனிதனின் வணக்கத்திற்கு உகந்த பொருள் ஒன்று உண்டு. அது பூமியிலுள்ள எல்லாப் பொருள்களைக் காட்டிலும் சொல்ல இயலாத அளவு சிறந்ததாகும். அந்த உன்னதப் பொருள் தான் இறைவன். அவன் நீங்கள் வணங்கும் கடவுள்களைப் போல மிருக பலம் உடையவனல்ல; கெட்ட குணங்களை உடையவனுமல்ல. அவன் மனிதனின் காரியங்களிலே தலையிடுபவனல்ல. அவன் உருவமில்லாதவன். "உண்மை" தான் அவன் என நீங்கள் கூறலாம். "அழகு" "நல்லவைகள்" தான் அவன் என்றும் நீங்கள் கூறலாம். ஆனால் எந்தச் சொல்லும் அவன் முழுத் தன்மையை வெளியிடாது. அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்.

"அறிவுள்ள மக்கள் அந்த அற்புத இயல்புகளையுடைய இறைவனுடன் உறவாடுதலை நல்லின்பம் என எண்ணுதல் வேண்டும். அதாவது அறிவுள்ள மக்கள் உண்மை தான் பேசவேண்டும்; யாவருக்கும் நல்லவைகள் தான் செய்ய வேண்டும். அழகைக் கண்டு ஆனந்தமடைதல் வேண்டும். அறிவுள்ள மனிதன் பணம் சேர்ப்பதைப் பற்றி எண்ணலாகாது; பெரிய இல்லங்களிலே வாழ வேண்டுமென்றோ அழகிய ஆடைகள் அணிய வேண்டுமென்றோ எண்ணலாகாது. அவன் அந்த உன்னதக் கடவுளைப் பற்றி எப்பொழுதும் எண்ணுதல் வேண்டும், எண்ணம் அவனை உயர்த்தும்."

இதைத் தான் அவர் கூறினார். கூறினாரென்றால் கூட்டங்கள் கூட்டியல்ல, பள்ளிகள் ஏற்படுத்தியல்ல! அவர் ஆதன்ஸ் நகர வீதிகளிலே திரிந்து கொண்டிருந்தார். அவர் தன்னிடம் பேச வருபவர்களிடம் தனது கருத்துகளை அள்ளி அள்ளி வீசினார். அவர் பேச்சிலே இனிமை கலந்திருந்தது; நகைச்சுவை மின்னி மின்னி மறைந்தன. அவர் பேச்சுக்கு அனைவரையும் தன்பால் கவரும் சக்தியிருந்தது. அவர் பழக்க வழக்கங்கள் விரும்பத் தகுந்தவைகள். அவர் நற்குணங்களின் இருப்பிடம். ஆதலால் மக்கள் அவரைச் சுற்றி கும்பல் கும்பலாகக் கூடினர், தம் தம் அறிவை வளர்ப்பதற்காக சின்னாளில் மக்களிடம் அவர் சிறந்த செல்வாக்கை அடைந்து விட்டார்.

அவர் புகழ் வளர்வதைக் கண்டு குருமார்கள் கிலி கொண்டனர்: இவனைத் தீர்த்து விட்டு தான் மறுவேலை என்று அவர்கள் சபதம் செய்தார்கள். சிந்தனையாளர்கள் எனத் தங்களைத் தாங்களே கூறிக் கொண்டவர்கள் பலர் அவர் மீது சினங் கொண்டனர். அவர் நாஸ்திகன் என நாக்கிலே நரம்பின்றி நவின்றார்கள். இன்னும் சிலர், முன்னோர் வணங்கிய தெய்வங்களை நாம் வணங்கக் கூடாது என்று கூற இந்த மடையன் யார் என மமதையோடு மொழிந்தார்கள். இவைகளுக்கெல்லாம் அவர் அஞ்சவில்லை. தனது கொள்கைகளை மக்களிடம் கூற அவர் தயங்கவேயில்லை.

அவர் கூறினார், "தக்க காரணங்களைக் கொண்டு தான் ஒவ்வொரு காரியத்தையும் சரி அல்லது தப்பு என நிச்சயிக்க வேண்டும். காரணம் தெய்வத் தன்மை வாய்ந்தது. நான் ஆராய்ந்த வரை காரணங்கள் பல நீங்கள் வணங்கிடும் கடவுள்கள் உண்மையிலேயே கடவுள்களல்ல என்று கூறும் போது நான் எப்படி அவைகளை வணங்க முடியும்?" என்று.

'எல்லாம் அறிந்தவர்கள் நாங்கள்' என்ற எண்ணங் கொண்டவர்கள் பலர் அவரின் கேள்விகளுக்கு விடை அளிக்க முடியாமல் திகைத்தார்கள். மனிதன் கற்றது அவன் கல்லாதவைகளை நோக்கினால் மிக மிகச் சிறியது என்று அவர் கூறினார்.

"மனிதனின் அறிவு அவன் புலன்களால் ஏமாற்றப்படுகிறது. மனிதன் இவ்வுலகில் பார்க்கத் தகுந்ததை யெல்லாம் பார்ப்பதாக எண்ணிவிடுகிறன். ஆனல் அவனல் பார்க்க முடியாதவைகள், அவனல் பார்க்க முடிந்தவைகளை விட மிக மிக அதிகம். மனிதன் வார்த்தைகளை சாதாரண பொருள்களைப் போன்று உபயோகப்படுத்துகிறன். தான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையிலேயே எந்த மர்மப் பொருளை உடையதாயிருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள மாட்டேன் என்கிறன்" என்று அவர் கூறினர்.

அவர் மேலும் கூறினர்: மனிதர்கள் நல்லவர்களாக வாழ வேண்டும். பகுத்தறிவை மனிதர்கள் வளர்க்க வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களை ஒவ்வொரு காரியத்தை செய்யப்புகும்போது, நான் இதை அல்லது அதை உண்மையாகவே நம்புகிறேன? இந்த அல்லது அந்த வார்த்தையின் உண்மைப் பொருளென்ன? ஏன் எதற்காக இந்தக் காரியத்தை நாம் செய்தல் வேண்டும்? என்று கேட்டுக்கொள்ளுதல் வேண்டும். இந்தப் பழக்கத்தை மனிதர்கள் மேற்கொண்டால் சிறிது காலத்தில் தாங்கள் அறிந்தது எவ்வளவு சிறியது என்பதை அறிய வருவார்கள். பிறகு தம்மை யொத்த மனிதர்களிடம் எப்படி பெருந்தன்மையாகப் பழக வேண்டும் என்பதை அறியவருவார்கள்."

அவர் மக்கள் இதயத்திலே ஏற்றின அறிவுச் சுடர்கள் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தன. மக்களின் இருளடைந்த இதயத்திலே குடிகொண்டிருந்த பழங் கடவுள்களின் எண்ணங்கள் ஓடிமறைந்தன. அவர் சித்தாந்தங்கள் குருக்களின் உள்ளங்களிலே கோபக் கனலை எழுப்பியது. முற்றுமுணர்ந்த மேதாவிகள் எனத் தங்களை எண்ணிக் கொண்டோர் பலர் அவரை ஒழித்துக்கட்ட முயற்சி செய்தனர். அதில் பலனும் கண்டனர். அவருக்கு அரசாங்கம் அளித்த தண்டனை மரண தண்டனை! அவர் செய்த தவறு? தனது உள்ளக் கருத்துக்களை வெளியிட்டதுதான்.

அவரிடம் பேரன்பு கொண்ட சிலர் அவரைச் சிறையினின்றும் தப்புவிக்கத் தக்க முயற்சிகள் செய்தனர். ஆனல் அவர் தப்பியோட மறுத்து விட்டார். மரணத்திற்காக அவர் அஞ்சவில்லை. ஆனல் அவர் அதைக் கண்டு சிரித்தார். இல்லை; மக்களின் மடமையைக்கண்டு நகைத்தார்.

ஒரு கோப்பை நஞ்சு அவர் கையிலே கொடுக்கப்பட்டது. அதை அவர் குடிக்க வேண்டும். அவ்விடத்தில் அன்பு கொண்டவர்கள் அழவும், குரோதம் கொண்டவர்கள்மகிழவும் அந்த ஒரு கோப்பை நஞ்சை உண்டார். மரணம் அவரைத் தழுவியது.

அவருண்ட நஞ்சு மக்களை மடமையின் பிடியினின்றும் விடுவித்து, நாட்டிலே உலவின ஆயிர மாயிரங் கடவுள்களை இருக்குமிடம் தெரியாமல் துரத்தியது. அவருண்ட நஞ்சு அவர் புகழை இவ்வுலகம் அழியும் வரை நிலைத்திருக்கும்படிச் செய்தது. அவருண்ட நஞ்சு அவர் கொள்கைகளை நாட்டிலே பரப்பும் வித்தாக மாறியது.

அவர் இறக்குமுன்பு, அவருடைய ஒரு மாணக்கர் அவரை அணுகி அவர் எப்படி தன்னை இறந்ததும் புதைக்க வேண்டுமென விரும்புகிறர் என்று கேட்டார். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே பதில் கூறினர்," என்னை உன்னல்புதைக்க முடியுமானல், நீ எப்படி விரும்புகிறயோ அப்படியே செய்" என்று.

ஆம்; அவர் புகழுடம்மை யாராலும் புதைக்க இயலாது. உலகம் உள்ளவரையில் அவர் புகழுடம்பு மறையாது.

அவர் யார்? அவர்தான் சாக்ரடீஸ்!

---


## ருஷ்ய நாட்டு அழகி

இராதாமணாளன் தீட்டிய அரிய நூல்,

செந்தமிழ் சிரித்து விளையாடும் இனிய நடை—தேன் ஆறு போன்ற கதைப்போக்கு—இன்பமா, துன்பமா, வீரமா, எல்லா உணர்ச்சிகளும் பின்னிக்கிடந்து எழில் பரப்பும் சிறு கதைகள். மூன்று வர்ண அட்டை. அழகிய பதிப்பு.

விலை 0 8 0 தபாலில் 0 9 0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

# இன்னமும் தீபாவளியா?

தீபாவளியை ஒரு முக்கிய பண்டிகையாய் கொண்டாடும் தோழர்களில் அதனுடைய வரலாற்றை அநேகமாய் தெரிந்துக் கொள்ளாதவர்களுண்டு. அதற்குக் காரணம் பெரியவர்கள் செய்ததை நாங்களும் செய்கின்றோம் என்ற முறையில் செய்கிறார்கள். யோசிப்பதில்லை. அதனுடைய உட்கருத்தைதெரிந்து கொண்டால் அதை நடத்தமாட்டார்கள் என்பது நம் எண்ணம். புராணப்படி அதனுடைய கதையைக் கீழே தருகின்றோம்:—

## ஆபாசக் களஞ்சியம்

இரண்யாட்சதன் பூமியைப் பாயாக சுருட்டிக்கொண்டு கடலில் ஒளிந்து கொண்டபொழுது திருமால் பன்றியுருக் கொண்டுவந்து, இரண்யாட்சதனைக் கொன்று பூமியை நிலைக்கச் செய்தாராம். அப்பொழுது பன்றியுருவோடிருந்த திருமாலை, பூமிதேவி மணம் செய்து கொள்ள விரும்பினாளாம். உடனே பன்றியும், பூமிதேவியும், திருமணம் செய்து கொண்டார்களாம். அவ்விருவருக்கும் ஒரு மகன் பிறந்தானாம் அவனுக்கு நரகாசூரன் என்று பெயர். இவன் "மாகிஷ்மதி" என்னும் பட்டணத்தை அரசாண்டு கொண்டிருந்தானாம். யுவஷ்டாவின் பெண்ணாகிய கசேரு என்பவளை இவன் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து மணம் செய்து கொண்டானாம். இவன் காசீபரின் மனைவியாகிய அதிதி என்பவளின் காதணியையும், வருணனுடைய குடையையும், கவர்ந்து கொண்டானாம். அன்றியும் எப்பொழுதும் தேவர்களுக்கு பெரும் இடையூறுகளைச் செய்து கொண்டே இருந்தானாம்.

இந்நரகாசூரன் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல், தேவர்களனைவரும் முறையிட்டதைக் கேட்ட திருமால் அவனைக்கிருஷ்ண அவதாரத்தில் கொன்றுவிடுவதாகவாக்களித்தாராம். அதன்படியே, கிருஷ்ணன், ஒருசமயத்தில் திருமாலின் அவதாரமென்று சொல்லப்படுகின்றதானும், பூமிதேவி அவதாரமென்று சொல்லப்படுகின்ற சத்தியபாமையென்னும் தனது மனைவியும் சேர்ந்து நரகாசூர பட்டிணத்தை அடைந்தார்கள். கண்ணன் நரகாசூரனுடன் எதிர்த்துசண்டை செய்து கொன்றானாம். நரகாசூரன் இறக்கும் போது, தான் இறந்த நாளை உலகத்தார் கொண்டாடும்படி செய்ய வேண்டுமென்று 'வேண்டிக்கொண்டானாம், அவன் வேண்டுகோளை நிறைவேற்றவேண்டுமென்று சத்தியபாமையும் விரும்பினாளாம். அதற்கறிகுறியாகத்தான் "தீபாவளி பண்டிகை" ஏற்பட்டதாம். இதுதான் பாகவதம் முதலிய புராணங்களில் வழங்கும் கதையாகும். இனி இக்கதை எவ்வளவு தூரம் உண்மை என்பதை சிறிது ஆராயலாம். பூமியைப் பாயாக சுருட்டிக்கொண்டு கடலிலொளித்தான் என்னும்கூற்று பொருந்துமா? பூமி உருண்டை வடிவமா? தட்டை வடிவமா? பூமியை பாயாக சுருட்டிக் கொண்டு கடலிலொளிப்பதுஎப்படி? பூமியெங்கிருக்கின்றது? கடல் எதன் மீதிருக்கிறது? என்ற கேள்விகளைக் கேட்போமாயின் திருமாலின் பன்றி யவதாரத்திற்கே ஆபத்து வந்துவிடுகின்றதன்றோ? பிறகு பூமிதேவி பன்றியைக் கண்டு ஆசைப்பட்டாள் என்று கூறுவதனால், பூமி என்பதோர் பெண்ணுருவமா? ஒரு இயற்கைப் பொருளை பெண்ணாக ஆக்கி அப்பெண் ஒரு பன்றியோடு சேர்ந்து பெரும்புகழ் வாய்ந்தஒரு பிள்ளையைப்பெற்றதாகக் கூறப்படும் கதையையும் உண்மை, என்று நம்புகிறவர், பகுத்தறிவுடையராக விருக்க முடியுமா? எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும், உலகங்களையெல்லாம் காத்துவருபவரும் தேவர்கள் தலைவருமாகிய திருமாலுக்கும், பூமிதேவிக்கும் எப்படி குழந்தை பிறக்கும்? பூமிதேவி யென்றால் பூமியல்லவா?) பிறந்தவன் எப்படி அசுரனானான்? அத்தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படி தீயசெயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும், அவனை பெற்றவனாகிய "திருமால்" தனது மகனை திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படியிருந்தாலும் தானே வந்துதான் கொல்லவேண்டுமா? மேற்படி நரகாசூரனைக் கொன்றபோது அவன் தாயாகிய பூமிதேவியும், சத்தியபாமையாகப்பிறந்து உடனிருந்ததாக கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவன்தான் உலகத்தையெல்லாம்காப்பாற்றுகின்றாளாம்? உலகமக்கள் செய்யும் பாவங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ளுகின்றாளாம்! பொறுமையில்பூமிதேவியைப்போல் என்று உதாரணத்திற்குஇந்த அம்மையாரைக் கூறிவருகின்றனர்! இந்த பூமிதேவியார் தனது மகனைக்கொல்லும்போது, தானும் உடனிருக்க வேண்டுமென்று திருமாலைக் கேட்டுக் கொண்டார்களாம்! என்னே தாயின் கருணை! தமி

[5-ம் பக்கம் பார்க்க]

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறட்டை பலமாக இருக்கே" என்று கேட்டுக்கொண்டே தோளைப் பிடித்துக் குலுக்கி எழுப்பினர். திடீலென விழித்துக்கொண்ட சாஸ்திரியார், "அக்கார வடிசலுக்கே கொஞ்சம் மயக்கமூட்டும் சுபாவம் உண்டு போலிருக்கு. அதைக் கொஞ்சம், இரண்டுதரம் அதிகமாச் சாட்டுட்டேன், ஒரே மந்தமா இருக்கு, சித்தெ கண்ணை மூடினேன்" என்றார். சர்மாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன ஓய் சொல்றேள்? அக்கார வடசல் சாட்டுரா? அடபாவிப் பிருமணு! என்னை உண்ணுவிரதம் இருக்கச் சொன்னீரே" என்று ஆத்திரத்தோடு கேட்டார். குப்புசாஸ்திரிக்கு அப்போதுதான் நினைவு வந்தது. அடடா! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டோம். அரைத் தூக்கத்திலே, உளறிவிட்டோமே. நமது குட்டு வெளிப்பட்டுவிட்டதே' என்று பதறி "இப்ப சாப்பிடவில்லை ஓய்! காலையிலே சாப்பிட்டது' என்று இழுத்தார். அவருடைய பேரன், கிட்டுப் பயல் ஒரு போக்கிரி, "ஏன் தாத்தா! புளுகிண்டிருக்கே. ஓய், மாமா! எங்காத்லே இப்போதான் அக்கார வடசல் செய்தா" என்று உண்மையை உரைத்துவிட்டான். உள்ளே இருநதும் ஒரு குரல் "பக்கத்தாத்து சர்மாவா? உமக்கும் ஒரு வட்டிலிலே தரட்டுமோ, கொஞ்சம் இருக்கு" என்று கேட்டது. குப்புசாஸ்திரியின் முகத்திலே அசடு வழிந்தது. சர்மா, கோபத்தோடு, "ஓய்! நீர் ஓர் அயோக்யராக்கும். என்னை உண்ணுவிரதமிருக்கச் சொன்னீர். நீரும் இருப்பதா சத்யம்செய்தீர். இப்படி யாருங்காணும் சத்யம் செய்துட்டு, திருட்டுதனமாச் சாப்பிடச் சொன்னு? உம்மமானத்தை வாங்க வேண்டாமோ?" என்று சீறினர். குப்புசாஸ்திரிக்கு குளரத்தான் முடிந்தது. 'இதோ பாருங்கோ சர்மா, இதைக்கேளுங்கோ...' என்று ஏதோ சமாதானம் செய்ய முயற்சித்தார். "என்னதை பார்க்கறதும், கேக்கறதும், இப்படிப்பட்ட அசத்யவாளா இருந்தாலும், அவாளுக்குச் சொத்து உண்டு, பெண்களுக்கு இல்லைன்னு, முறை இருப்பது ஒழிஞ்சாகவேணும். உம்மைப் போன்றவாளுடைய கோட்டம் அடங்க" என்றுகூறிவிட்டு, வீட்டிற்கு வந்தார். ஏண்டி, சாம்பார் வத்தல், துவையல் பூராவுமே காணும் செய்துட்டாயோ, ஏதாகிலும் கொஞ்சமாவது இருக்கோ' என்று சகதர்மணியைக் கேட்டார். "பயத்தைக்கிளறதோ?" என்று சகதர்மணி கேட்டாள். "இல்லடி, நான் உங்க கட்சியிலே சேர்ந்துட்டேன். இலை போடு. இந்தப் பக்கத்தாத்துப்பாவி பேச்சைக் கேட்டு உண்ணுவிரதமிருக்கலாமென நினைச்சேன். அவன் என்னசெய்தான் தெரியுமோ. என்னை உண்ணுவிரதம் இருக்கச் சொல்லிவிட்டு, உள்ளே போய் அக்கார வடிசலை வயறு கிழியச் சாட்டிட்டு, வாசத்திண்ணையிலே படுத்துப்புரள்றுன், அவன்தான், பெண்களுக்குச் சொத்து தரலாமோ, சாஸ்திர விரோதமன்னே, வேதகாலஏற்பாடுபாழாகலாமோன்னு பிதற்றினன். பேஷாதரணும் பெண்களுக்குச் சொத்து. ஐஸ்வரியத்துக்கே, லக்ஷிமிதேவின்னு அதிகாரி! பெண்கள், லக்ஷிமி அம்சமன்னே, அவாளுக்குச்சொத்து பாத்யதை இல்லேன்னு சொல்றது முட்டாள் தனமன்னே' என்று சர்மா, மசோதாவை ஆதரித்துப் பேசினர்.

"அப்படிச் சொல்லுங்கோ! ஆதிநாட்கள் ஆதிநாட்கள், என்று பேசின போதுமா? அறிவுக்குச் சரியானதுன்னு தோணின, அனுசரிக்கத்தானே வேண்டும். இனிமேல், இந்தச் சட்டம் சீக்கிரம்வரணும்னு பேசும்" என்று புத்திகூறினள் சகதர்மணி. "சரி! சாட்டுட்டுப் பேசுவோமே?" என்று காரியத்தைக் கவனப்படுத்தினர் சர்மா. அந்தச் சாம்பாரும், துகையலும், வத்தலும், உள்ளேபோனல்தான், உறக்கம்வரும். ஆனல் பாவம், அவர் அழாதது ஒன்றுதான் பாக்கி, அம்மையாரின் மொழிகேட்டு. என்ன அது! "இப்போ ஏது, சாதம்? எல்லாம் எதிராத்துக்குக் கொடுத்தாச்சே. பாத்திரத்தைக்கூட அலம்பி ஆயிடுத்தே" என்றுள் அந்த அம்மையார். உள்ளே போய்ப்பார்த்தார், பளபளவெனப் பிரகாசித்தன பாத்திரங்கள், அவரைப் பார்த்துக்கேலியுடன் சிரிப்பது போல!

—'தி.நா.'

---

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

என்பதை எண்ணும்போது, பிற காதா வருத்தம்!

சோகமும் சோர்வும் வாட்டமும் வாருத்தமும் துக்கமும் ஏக்கமும் திகைப்பும் திக்பிரமையும் அமெரிக்காவுக்கு இப்போது ஏற்படுவது இயற்கை—மாஸ்கோ வீசிய அணுக்குண்டு அத்தகைய உள்ள உணர்ச்சிகளை அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் உள்ளத்திலே ஏற்படுத்துவது நிச்சயம்தான்.

ஆனல் இந்த மாஸ்கோ வீசிய அணுக்குண்டின் விளைவாக சோக உணர்ச்சிகளும் ஏக்க அலைகளும் மட்டும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் உள்ளத்தில் ஏற்பட்டால் போதாது, தங்களிடம் அணுக்குண்டு இருக்கிறது என்ற மமதை காரணமாக அடிக்கடி ரஷ்யாவை, வீண் சண்டைக்கு இழுக்கும் வீம்புப் போக்கும் வெறிச் செயலும் அமெரிக்கப் போர் வெறித் தலைவர்களின் செய்கையிலிருந்து அடியோடு அகன்று ஒழிதல் வேண்டும். "நம்மைப் போலத்தான் ரஷ்யாவும் அணுக்குண்டு வைத்திருக்கிறது. எனவே நாம் ஒன்றும் ரஷ்யாவை விட பலமான நிலையில் இல்லை" என்ற எண்ணம் ஏற்பட வேண்டும் அமெரிக்கருக்கு. அந்த எண்ணம் ஏற்பட்டால்தான், அவர்கள், ரஷ்யாவை, சமாதான நோக்கத்துடன் அணுகுவர். அப்படி அவர்கள் ரஷ்யாவை சமாதான நோக்கத்துடன் அணுகினல்தான், உலகில் சமாதானம் நிலைத்து நிற்கவும் போர் மூளாமல் இருக்கவும் வழி பிறக்கும். இந்த "மாஸ்கோ வீசிய அணுக்குண்டு" காரணமாக, அமெரிக்க மனப்பான்மையில் இந்த வகையில் நல்லதோர் மாறுதல் ஏற்படுமா?

ஏற்பட்டால் உலகுக்கு நல்லது அமெரிக்காவுக்கும் நல்லது.

---

'இளவரசி'

அடுத்த இதழில்

# திராவிட முன்னேற்றக் கழகம்!

## இருண்ட வீட்டில் ஏற்றப்பட்ட ஒளி விளக்கு!

[மு. கருணாநிதி]

திராவிடரின் இலட்சியப் பாதை யிலே ஏற்பட்டிருந்த தேக்கம் நீங்கி விட்டது. 'திராவிட நாடு திராவிட ருக்கே' என்பது நமது இன்பபுரி அந்த இன்பபுரிக்குப்பயணம் நடத் திய நாம் பாதையிலே பாறை யொன்று ஓங்கி வளர்ந்திருக்கக் கண்டோம். பாறையைப் பெயர்த் தெறிந்துவிட்டு பயணத்தைத் தொடர ஆற்றலும்—அனுபவமும் இருந்துங்கூட பாறையை விட்டு, த்து அடிதூரம் ஒதுங்கி வேறு பாதை அமைத்து மீண்டும் இலட் சிய வழியைத் தொட முடிவுகட்டி விட்டோம், நம்மைப் போல் அவ சியம் உணராதவர்கள்—இலட்சிய ரிக்கு நடக்க விரும்பாதவர்கள்—டந்தால் இன்னல்கள் அனுபவிக்க நேரிடுமே என அஞ்சுபவர்கள்—பாறையின் அடிவாரத்திலேயே த்துறங்குகிறார்கள். நம் பாதை டிக்கவில்லை யென்பதல்ல பொருள்; களைப்பாறலாம் என்ற னைப்பால்! கடுமொழி வீசி நம் வேகத்தையும் குறைக்கலாம் என்ற ஆசைக்கனவு தான் அது. அந்த கனவு தேய்ந்து விட்டது என்பதன் விடிவெள்ளி தான் திரா ட முன்னேற்றக் கழகம். பாறை யைப் புரட்டிவிட்டு-புரட்டிய இடத் தில் ஏற்படும் பள்ளத்தை சீர்படுத்த டாத பாடுபட்டு—பிறகு பார்க்கப் போனால், பாதை செப்பனிட்ட வேலைதான் மிச்சமாயிருக்கும். இன்பபுரி எட்டாத தொலைவிலேயே இருக்கும், இதை யோசித்த பிறகு தான் முன்னேற்றக் கழகம் முளைத் தது விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்களே; அதுதான் சிங்காரச் சென்னையிலே சிறப்புற நடைபெற்ற துவக்கவிழா. 'பெரி யார் நம் எதிரியல்ல; பழமையும் ஆரிசமும் தான் நம் எதிரிகள்—இனி பெரியாருக்கும் நமக்கும் திரு மண விஷயமான தகராறில்லை—ஏனென்றால் அவர் தலைமையினின் றும் நாம் நீங்கிவிட்டோம்—புது வழி கண்டு விட்டோம்—போராடு வோம், பெரியார் இயக்கத்தோடு அல்ல—திராவிடருக்கு தீங்கு தரும் கருத்துக்களோடு!, என்ற கண்ணி யத்தை எண்ணத்தில் ஊறவிட்டுக் கொண்டு செயலாற்ற முனைந்திருக் கிறோம் நாம். நாமென்றால் வேதனை தாங்காது—விம்மிக் கொண்டிருந்த பகுத்தறிவுப் படையினர், ஆம் அழுது புலம்பியவர்கள். "ஆண் டாண்டு தோறும் அழுது புரண்டா லும் அய்யா மாறமாட்டார்—மணத் தை நிறுத்தமாட்டார். வேண்டாம் நமக்கும் அவர் வழிதான்...நாம போம்பாதை இதுவென அமைந் திடுவோம்" என உணர்ந்த பிறகு நாட்டுப் பணிபுரிய கண் துடைத் துக் கிளம்பியவர்கள்! நாம் விலகி வந்த பிறகு நம்மை விடுகிறவர்களா அவர்கள். நாகப்பாம்பைக் கூட மிதித்தால் தான் கடிக்கும் என்பார் கள். தேள் கூட தொட்டால்தான் கொட்டுமாம். ஆனால் பெரியார் அவர்களோவலுச்சண்டைக்கு வரு கிறார். வாளை உருவிக்காட்டுகிறார். 'வாடா போருக்கு' எனத் தோள் தட்டுகிறார். அவர் நிலைக்கு ஆகா தது. திருமண ஏற்பாட்டைவிட வீழ்ச்சி தரக்கூடியது, நாடு நகைக் கத் தக்க காட்சியை உண்டாக்கு வது.

17-9-49-ல் திராவிட முன்னேற் றக் கழகம் நிறுவியதானது பெரி யார் போக்கைக் கண்டித்துள்ள உறுப்பினர்கள் கலந்து பேசி உண் டாக்கிய உன்னத முடிவாகும். இதை பல நாட்களாகவே மாலை மணியில் வந்த அண்ணாவின் அறிக் கை விளக்கமாகத்தெளிவுபடுத்தும்; 'தெளிவுக்கு ஆக' 'விளக்கம்' தர வேண்டிய 'இறுதி முயற்சி'கள் செய்து இன்னுமா விளக்கம் தேவை? என எழுதவேண்டிய அவசியமே இல்லை. எப்போதுமே மாற்றுக் கட்சியின் செய்திகளை தவறாகப் பிரசுரிக்கும் தன்மை கொண்ட சில தினசரிப் பத்திரிகை கள் 'கமிட்டிக் கூட்டம்' என பிர சுரித்ததை சாக்காக வைத்துக் கொண்டு கணைவீசுகிறார் பெரியார், விடுதலையார் திரையில்! இன்னும் பாருங்கள் பெரியாரின் பண்பு போகும் பரிதாபக் காட்சியை!

"பொது மக்களை ஏமாற்றி, தங் கள் பிழைப்புக்கு வகைசெய்து கொள்ள சிலரும்" இது பெரியார் பொன்மொழி. சரியா? முறையா?

"திராவிட கழகத்தை ஒழிப்பதற் கும் அதற்கு இருக்கும் செல்வாக் கை அழிப்பதற்கும் புதுக்கழகம் ஏற்பட்டுள்ளது" இதுவும் அவர் கருத்துத்தான். திராவிட கழகத் தின் செல்வாக்கு யாரால் அழிக் கப்பட்டது? ஏன் மூன்று மாதம் கழகம் ஸ்தம்பித்தது? அந்த ஸ்தம் பிப்புக்குக் காரணகர்த்தா யார்? செல்வாக்கு அற்ற சுயநல வாழ்க் கையினரின் ஒத்துழையாமையால் ஒரு கழகம் வேலை செய்யாமல் மூன்று மாதம் உறங்கிற்று என் றால் அவர்கட்கிருக்கும் ஆற்றல் எவ்வளவு? யோசிக்க வேண் டாமா பெரியார்? திராவிட கழகத் தின் செல்வாக்கு அழிந்து விடும் என்பதை பெரியாரே ஒப்புக்கொள் கிறாரா? கேட்கமாட்டார்களா மக் கள் இப்படியெல்லாம்.

புதுக்கழகம் பூத்திருப்பது "ஒரு ரூபாய் பெடை வெள்ளிக் காப்புக்கு ஒரு குழந்தையின் கழுத்தைத்திருகி ஜலதாரையில் திணிக்கும்படியான அளவு துணிவும், தைரியமும் கொள்ளும்படியான காரியமாக அல்லவா காணப்படுகிறது" என உதாரணத்தை வாறி வீசுகிறார். இந்த உதாரணத்தை அவருக்கே திருப்பிப் பார்த்தால், புதுக்கழகம் இருக்க வேண்டிய இடத்திலே பெரியாரும்—வெள்ளிக் காப்புக் குப் பதில் E. V. R. மணியம்மை யார் அவர்களும்—குழந்தையின் ஸ்தானத்தில் திராவிட கழகமும்—என்ற ரீதியில் அமைத்துப் பார்த் தால் பெரியாரின் உதாரணம் எரி மலையின் மேல் விளையாடுகிற வேடிக்கையாகத் தானிருக்கும். ஒரு மணியம்மைக்காக—திராவிடக் கழகம் என்ற மூத்தாள் குழந்தை யை கழுத்தை நெறித்துக்கொன்று விட்ட பெரியார், நம்மை நோக்கி

குறத்தை விட்டெறிகிறார். நல்ல நகைச்சுவைப் பகுதி!...வெள்ளிக் காப்பு அல்ல; ஐந்து லட்சம் வந்தால் கூட கொள்கையிலிருந்து அசையாத நெஞ்சுறுதி படைத்தவர்கள் எம்மிடம் ஏராளம் அய்யா! என்பதைத்தான் அவருக்கு நாம் கூற வேண்டியிருக்கிறது.

"பெரியார் அமர்ந்த தலைவர் நாற்காலியில் இனியாரும் அமர அனுமதிக்க மாட்டோம். அவரே என் முதல் தலைவரும் கடைசித் தலைவரும். அவர் என்னைத் தூற்றட்டும்; கவலையில்லை. இதைவிட அதிகமாக என்னைப் போற்றியிருக்கிறார்."

இது அறிஞர் அண்ணாவின் பேச்சில் காணும் கருத்து.

"அண்ணாத்துரை யோக்யன் போல் நடந்து கொள்கிறார். முட்டாள்களையும் காலிகளையும் விட்டு மானமரியாதையின்றி பொய், புளுகு, அயோக்யத்தனமாய்பேசச் செய்கிறார்" இது, பேரறிஞர் பெரியாரின் சொந்தப் பத்திரிகையில் வந்துள்ள வாசகம்.

பெரிய பெரிய சிக்கலான பிரச்சினைகளை யெல்லாம் அழகாக விளக்கும் அவர், ராதா நாடகத்தைப் போற்றுவதாக நினைத்துக் கொண்டு தோழர் ராதாவை கம்பனுக்கு உவமை யாக்கிக் காட்டுவதும், ராதா நாடகம்—கம்பராமாயணம் "இவைகளைவிட உயர்ந்தவை மூலையில் கிடக்கின்றன" என்று எழுதுவதும், திராவிட கழகத்தை, "இராமனுக்கு" உதாரணமாக்கிச் சித்தரிப்பதும் ஆத்திரத்தின் விளைவா......? நினைத்தது ஒன்று எழுதியது ஒன்றா...? உண்மையாகவே நடிகவேளிடம் கசப்பு ஏற்பட்டுவிட்டதா...? திராவிடம் கேட்கிறது கேலியாக; பரிகாசப் புன்னகையுடன்!...விடுதலைப் பெரியார் விளக்க முடியாத அளவுக்கு!...

"வீண் வம்புக்குப் போவதில்லை. வீரம் விழலுக்கு நீர்பாய்ச்ச அல்ல; வெற்றியை நோக்கிச் . செல்ல! வேலிதாண்டுகிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பூங்காவையோ அழிக்க முற்படவேண்டாம்" —என்று முன்னேற்றக் கழகத்தின் பொதுக் காரியதரிசி முழக்கிய பிறகு, திராவிட கழக முனையின் தலைவரே வேலிதாண்ட ஆரம்பித்தால், விலாவில் வேல் பாய்ந்த நிலைதானே ஏற்படுகிறது நமக்கு, நமக்கும் இருதயம்—இருதயத்திலே உணர்ச்சி நரம்புகள்—அந்த நரம்புகளிலே ரத்த ஓட்டம்—இத்தனையும் இருக்கத்தான் செய்கின்றன! ஆனாலும் அவர் விஷ அஸ்திரங்களை வீசட்டும். அவர் பண்பைப் பின்பற்றி நாமும் ஆபாசக்களத்தை சிருஷ்டிக்க வேண்டாம். நம்மிடம் கண்ணியம் என்ற கேடயம் இருக்கிறது. விஷப்பிரச்சாரம் நடைபெற்றால் விஷய விளக்கம் புரிவோம். வீண் சச்சரவு தேவையில்லை. வலுச்சண்டையும் நம் வழக்கமில்லை. நம் திட்டப்படி நம்மை நாடு எதிர்பார்த்திருக்கும் நேரமிது. அரசியல் பொருளாதாரம்—சமுதாயம் இதன் பெயரால் மக்கள் நலிவதைத் தடுக்க வேண்டிய சந்தர்ப்பமிது. மூன்று முனைகளிலே நம் வீரர்கள் போராட்டம் தொடங்கிவிட்டோம் என முழக்கமிட்டுத் தீரவேண்டிய வேளையிது.

அந்த அவசியத்தையும்—அவசரத்தையும் உணர்ந்தே, திராவிட கழகத்தில் பணியாற்றி 'பழி'யைப் பரிசாகப் பெற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், தொடங்கியிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகம், இருண்ட வீட்டில் ஏற்றப்பட்ட ஒளி விளக்கு. எட்டிக்காய் திணிக்கப்பட்டவனின் வாயில் ஊற்றப்பட்ட இன்பத் தேன் நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலவு.

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!

---

சென்ற இதழ் தொடர்ச்சி:

## இந்த சிவராமர்கள்!

பிரிய இயலாது வருந்தினான். காமத்தீ சுட்டது, கூடிய விரைவில் திரும்பி வந்து, பதிவுத் திருமணம் செய்து கொள்வதாய் வாக்களித்து விட்டு வெளியேறினான்.

சிவராமன் ஜங்ஷனை நோக்கி நடந்தானே யொழிய, அவன் மனம் நிம்மதியாய் இல்லை.

"விமலா ஒரு விதவை."

"இருந்தால் என்ன? அவள் கண்களிலே ஒளி இல்லையா? அதரத்திலே அழகு இல்லையா? கன்னத்திலே மினு மினுப்பில்லையா? உடல் முழுவதும் இளமை தாண்டவமாட வில்லையா? நடையிலே ஒய்யார மில்லையா? குரலிலே கோகிலம் இல்லையா?"

"என்ன இருந்தாலும், விதவை! கசக்கி எறியப்பட்ட கனிதானே!"

இங்ஙனம் மனப் போராட்டத்தோடு ஜங்ஷனை அடைந்தான் சிவராமன். தன் உத்யோக அலுவலுடன் அப்பொழுது புறப்பட இருந்த வண்டியிலே திருச்சிக்குப் புறப்பட்டான். பின்னர் எத்தனையோ நாட்கள்தான் சிவராமன் விழுப்புரம் வருகிறான். ஆனால் விமலாவைப் பற்றி கவலை கொள்வதில்லை.

விமலா எத்தனையோ நாள் சிவராமன் வருகைக்காக காத்திருந்தாள். பயனில்லை. சமூகத்திலே தான் ஒரு விதவை; அதோடு விபசாரி என்று எண்ணும் போது குமுறி அழுவாள். சிவராமர்கள் இந்தச் சமூகத்திலே இருக்கும் வரை, விமலாக்களுக்கு விமோசனம் ஏது? இந்த சிவராமர்கள் நம் சமுதாயத்தை விட்டு என்றுதான் தொலைவார்களோ—யார் கூற முடியும்?

---


## திருக்குறள் நூல்கள்

| | ரூ | அ |
|---|---|---|
| திருக்குறள்—பரிமேலழகம் உரை | 5 | [illegible] |
| திருக்குறள்—புலவர் குழந்தை உரை | 5 | [illegible] |
| திருக்குறள்—விளக்கவுரை | 4 | [illegible] |
| திருக்குறள்—டாக்டர் மு. வரதராசன் தெளிவுரை | 1 | [illegible] |
| திருக்குறள்—ஆங்கில மொழி பெயர்ப்புடன் | 1 | [illegible] |
| திருக்குறள் தெளிவு (புதுவை வெளியீடு) | 0 | [illegible] |
| திருக்குறள் ஆராய்ச்சி | 1 | [illegible] |
| திருவள்ளுவர் வரலாறு | 0 | [illegible] |
| வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும் | 0 | 8 |


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Fras Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanjcheliyan B. A. (Hons